சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.03.04.2025
O.S.No. 6/2019
PW2 : நித்தியானந்தம் (வயது 55 ) த/பெ.மூக்கபிள்ளை
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது, நீதிமன்றத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். எனது நிருபண வாக்குமூலத்தை தட்டச்சு செய்யும்போது நான் உடன் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு வந்த பிறகு எனது பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து போட சொன்னதால் நான் கையெழுத்து போட்டேன் என்றும் அதன் பின்பு தான் அதில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அகிலாண்டேஸ்வரி மற்றும் அவரது கணவர் எனது நண்பரா என்றால் அவர்கள் குடும்பத்தினர்கள் அனைவரும் எனது நண்பர்கள். புஷ்பத்தம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் கஜா புயலின்போது இறந்தார். அவரின் இறப்பிற்கு நான் சென்றேன். உயில் ஆவணம் எழுதி வைத்ததாக சொல்லும் தேதியிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து புஷ்பத்தம்மாள் இறந்தார் என்றால் உயில் எழுதிவைத்து 4,5 மாதங்கள் கழித்து இறந்தார். உயில் ஆவணம் எழுதியதாக சொல்லப்படும் தேதியில் புஷ்பத்தம்மாள் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். புஷ்பத்தம்மாள் உடல் நிலையிலும் மன நிலையிலும் சரியில்லாத நேரத்தில் எனது நண்பரும் 1 ஆம் வாதியின் கணவர் வெங்கடாச்சலம் புஷ்பத்தம்மாளிடம் உயில் ஆவணத்தை தயாரித்து அவரிடம் கையொப்பம் வாங்கியுள்ளார் என்றும் நண்பர் என்ற முறையில் நான் அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அது பொய்யானது. நான் சொல்லி, தட்டச்சு செய்யப்படாத நிருபண வாக்குமூலத்தின் பேரில் நான் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றும், புஷ்பத்தம்மாள் நல்ல உடல்நிலையிலும், மன நிலையிலும் இல்லாத போது பெறப்பட்ட கைரேகையை வைத்து உயில் ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது நண்பருக்கு ஆதரவாக

பொய்யான ஆவணம் ஏற்படுத்தியும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புஷ்பத்தம்மாள் திருப்பஞ்சீலியில் அவரது வீட்டில் இறந்தார். உயில் ஆவணத்தை யார் எழுதியது என்றால் பத்திர அலுவலகத்தில் வைத்து எழுதினார்கள். சாட்சி தானாக முன்வந்து புஷ்பத்தம்மாள் உடல் நிலை சரியில்லாததால் காரில் வந்தார், அவர் சொன்ன தகவலின்பேரில் எழுதப்பட்டு, பின்பு அவர் சென்று விட்டார். மாலையில் மீண்டும் வந்து கைரேகை வைத்தார், என்னை சாட்சி கையெழுத்து போட சொன்னதால் நான் போட்டேன். புஷ்பத்தம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அவரால் எந்த தகவலும் சொல்ல முடியாத நிலையில் இருந்தார் என்றும், சார்பதிவு அலுவலர், பத்திரத்தை பதிவு செய்ய முடியாது என்று சொன்னதால் தான் அவர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், எனது நண்பர் சார்பதிவாளரிடம் அழுத்தம் கொடுத்து மீண்டும் மாலை பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புஷ்பத்தம்மாள் நல்ல உடல் நிலையில் திடகாத்திரமாக இருந்து, உயில் ஆவணத்தை எழுதி வைக்கவில்லை என்பதால், உயில் ஆவணம் மோசடியானது என்றும், அந்த மோசடிக்கு நான் துணையாக சென்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் பொய்யானது என்றால் சரியல்ல.

<u>2,3 பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u> - முன்மொழிவு இல்லாததால் முடிக்கப்பட்டது.

/ signed/
நித்தியானந்தம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி